**கவனிக்க.-** *18.08.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* III *மற்றும்* IV*(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2034 - 2017 අගෝස්තු මස 25 වැනි සිකුරාදා - 2017.08.25

*2034 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1437* |


**கவனிக்க.-** (i) நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் *2017*, ஓகத்து மாதம் *18* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மோட்டார் வாகனம் (திருத்தம்) சட்டமூலம் *2017*, ஓகத்து மாதம் *18* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*''ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.''*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016/ 2017

நாடு முழுவதும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சிவில், பொறிமுறை, புகையிரத திணைக்களத்தின் மின் (கனதி) மற்றும் மின் (இலகு) பொறியியல் ஆகிய வகுதிகளைச் சேர்ந்த பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு, ''செயலாளர், அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில்- ''நிறைவேற்றுத்தர சேவை வகுதியின் III ஆம் தரத்தைச் சேர்ந்த இலங்கை பொறியியலாளர் சேவையின் பதவிகள் தொடர்பான திறந்த போட்டிப் பரீட்சை - 2016/ 2017'' எனத் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2017.09.25 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான ஆவணம் தபாலில் காணாமற் போனமை அல்லது தாமதம் குறித்துச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப் படிவத்தை தாமதப் படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு பரீட்சார்த்திகளே பொறுப்பேற்க வேண்டும்.

திறந்த அடிப்படையில் இலங்கை பொறியியலாளர் சேவைக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகளின் எண்ணிக்கை 229 ஆவதுடன், அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளின் கீழ் வகுக்கப்படுகின்றன.

| வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிவில் வகுதி | 162 |
| பொறிமுறை வகுதி | 15 |
| மின் வகுதி | 09 |
| பௌதிக வளங்கள் வகுதி | 42 |
| இரசாயன | 01 |
| மொத்தம் | 229 |

1. **ஆட்சேர்ப்பு முறை :**

1.1 திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக குறித்த பாடப் பரப்புக்களின் கீழ் தொழிற்சார் தகைமை பெற்ற பொறியியலாளர்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவர். நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கையினர் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும். நிலவுகின்ற வெற்றிடங்களின் சிறு தொகையினரை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

1.1.1 நியமனம் வழங்குவது தொடர்பாக ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ் வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகளின் ஒழுங்குமுறைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பதவிகளுக்கான தகைமைளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பது பற்றி பரீட்சிக்கப்பட்டதன் பின்னரே அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படுவர்.

1.1.2 ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ்வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், அலுவலர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் அலுவலர்கள் ஆட்சேர்க் கப்படுவர். (கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பதவிகளுக்கான தகைமைளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பது பற்றி பரீட்சிக்கப்படும். பின்னரே அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படுவர்.

2. **சேவை நிபந்தனைகள் :**

2.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1836/ 6 மற்றும் 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள் ளப்பட்டுள்ளதும், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும்,

அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், கீழ்ப்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

2.2 இப்பதவி நிரந்தரமாவதுடன், அதற்குரித்தான ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.3 இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்றாண்டு (03) நன்னடத்தைக் காலத்திற்கு கீழ்ப்படுவதுடன், மூன்றாண்டுகளுள் (03) முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

2.4 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இன் ஏற்பாடுகள் மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக மற்றைய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தை ஐந்தாண்டுகளில் (05) பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களினால் நன்னடத்தைக் காலத்தினுள் ஒரு அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2.5 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் அனைத்து கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

2.6 நியமனம் பெற்றவர்கள், இந்நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

2.7 நியமனம் பெற்றவர்கள், அரசாங்க சேவையைப் போன்றே மாகாண அரசாங்க சேவையிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டவர்களாவர்.

2.8 தாம் நியமிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும் நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கின்ற அல்லது தவிர்க்கின்ற நியமனம் பெறுநர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 ஐக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமையவும், SL - 1 - 2016 சம்பள வகுதிக்கமையவும், இப்பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2170 - ரூபா 1,10,895 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும். (துங்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும்.)

எவ்வாறாயினும், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் பூரண தொழிற் தகைமைகளைப் (பட்டயப் பொறியியலாளர் நிலை) பெற்றுள்ள அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் பொறியியலாளராக பூரண தொழிற் தகைமைகளைப் பெற்ற அவ்வலுவலர் சேவையின் III ஆம் தரத்தின் ஆறாவது (06) சம்பளப் படிமுறையில் அமர்த்தப்படுவர்.

4. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

4.1 ***கல்வித் தகைமைகள் :***

4.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து, அவ் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நான்காண்டுகால (04) முழுநேர பொறியியல் விஞ்ஞானமானி பாடநெறியை திறம்பட பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

4.1.2 மேற்படி 4.1.1. இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறிக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாட விதானத்தின் கீழ் பூர்த்தி செய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4.2 ***தொழிற் தகைமைகள் :***

4.2.1 இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து அது சம்பந்தமான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்றுள்ளது என்பது பற்றி உறுதிப்படுத்துவதற்கு அந் நிறுவனத்தினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **வயதெல்லை :**

5.1 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

5.2 எவ்வாறாயினும், 2013.11.11 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்துள்ள அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவர் (அதாவது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராக (முன்னாள் தொழில்நுட்ப உதவியாளர்) அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவி வகிக்கும் அலுவலரொருவராக அல்லது ஏனைய அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய நியமன அதிகாரியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகைமை பெற்ற தொழில்நுட்ப அலுவலர் ஒருவருக்கு) உச்ச வயதெல்லை 45 ஆகும்.

6. **தேகாரோக்கியம் :**

6.1. எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக் குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள் :**

7.1 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

7.2 சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

7.3 மேலே 4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு உரிய சான்றிதழ்களை வழங்குவதற்கு காரணியாயமைந்த பூரண விபரங்களடங்கிய பெறுபேற்று ஆவணங்களில் (Academic transcript) அடங்கியுள்ள பாடங்கள், ஆட்சேர்ப்பு செய்யப்படும் சேவை வகுதிக்கான தேவைப்பாடுளுடன் எல்லா வகையிலும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

7.4 ஏதேனும் சமயப் பிரிவொன்றின் போதகராக பதவி வகிக்கும் ஒருவர் விண்ணப்பிப்பதற்கு தகைமைபெற மாட்டார்.

7.5 மேலே இல. 5.2 இன் கீழ் தகைமை பெறும் தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் தமது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியளவில் அச் சேவையில் உடன் முன்னரான 05 ஆண்டுகால திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.6. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. எழுத்துமுலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :-

8.1 ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ் வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக் கையை விட குறைவாக காணப்படும் சந்தர்ப் பங்களில்,

8.1.1 வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ள வகுதியின் கீழ் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக எழுத்துமுலப் பரீட்சை நடாத்தப்படுவதில்லை. அவர்களது சேவை மூப்பின் ஒழுங்குமுறைப்படி தீரமானம் எடுப்பதற்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

8.1.2 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுவதுடன், அதில் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பினதும் அதற்கமைய வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றியும், உடற்தகைமைகள் பற்றியும் பரீட்சிக்கப்படும்.

8.1.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கை ஆட்சேர்க்கப்படும்போது, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கு அமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணபதாரியில் இருந்து தேர்ச்சி முன்னுரிமைப்படி சேவையின் III ஆம் தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்படும்.

8.1.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை தொடர்பாக 100 புள்ளிகள் வழங்கப் படும்.

(ii) எக்காரணம் கொண்டும் ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை மாற்றப்பட மாட்டாது.

(iii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும் :

| | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01 | கல்வித் தகைமைகள் | 60 |
| 02 | சேவைக்கால அனுபவம் | 10 |
| 03 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 04 | வெளித் திறன்கள் /விசேட திறன்கள் | 05 |
| 05 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறன்கள் | 05 |
| | மொத்தம் | 100 |

**குறிப்பு**.- (அ) நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வது என்பது பதவி வழங்கலுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாக கருதப்படலாகாது.

(ஆ) கட்டமைக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறைக்கமைய ஒவ்வொரு வகுதியின் கீழ் புள்ளி வழங்கும் போது அதற்குரிய குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகள், சான்றிதழ்கள் என்பவற்றைச் சமர்ப்பித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரரினால் தனது கையொப்பத்தை இட்டு சத்தியப் பிரதி என சான்றுப்படுத்தப்பட்ட அச்சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் குறித்த நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 ஒவ்வொரு வகுதியின் கீழும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கையானது அவ் வகுதியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக காணப்படும் சந்தர்ப்பங்களில்,

8.2.1 வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ள வகுதியின் கீழ் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படுவதுடன்,விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்குமுறைக்கமைய சாதாரண நேர்முகப் பரீட்சை தொடர்பாக அழைக்கப்படுவர்.

8.2.2 மேற்படி 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பொறியியலாளர்களது ஆட்சேர்ப்பு வரிசையை உறுதிப்படுத்தும் நோக்குடன் இத்தரப்பரீட்சை நடாத்தப்படும்.

8.2.3 எழுத்துமூலப் பரீட்சை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

8.2.4 எழுத்துமூலப் பரீட்சையின் விடயப்பரப்பு

1. மேற்படி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் விஞ்ஞான கற்கையின் மூலம் விண்ணப்பதாரியின் பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மானமெடுக்கும் திறன் என்பவற்றை ஆராய்வதை நோக்காக கொண்டு இப்பரீட்சை 100 புள்ளிகளைக் கொண்ட எழுத்து மூல திறனாய்வு பரீட்சையினால் வரையறுக்கப்படுகின்றது. வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன், அது தொடர்பாக 1 1/ 2 மணித்தியாலயம் வழங்கப்படும். அத்துடன் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

8.2.5 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் சாதாரண நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் சாதாரண நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுவதுடன், அதில் இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பினதும் அதற்கமைய வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றியும், உடற்தகைமைகள் பற்றியும் பரீட்சிக்கப்படும்.

8.3 பரீட்சார்த்தியொருவரினால் நேர்முகப் பரீட்சையின்போது குறித்த சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவ்வனைத்து ஆவணங்கள்/ சான்றிதழ்கள் எல்லா விதத்திலும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். உரிய அதிகாரியின் தழுவல் அங்கீகாரத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற எந்தவொரு ஆவணமும்/சான்றிதழ்களும் செல்லுபடியாகாது.

8.4 அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரரினால் தனது கையொப்பத்தை இட்டு உண்மையான பிரதி என சான்றுப்படுத்தப்பட்ட அச்சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் குறித்த நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

8.5 பல பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் உசிதமான தீர்மானம் எடுக்கப்படுவதுடன், அதுவே இறுதியான தீர்மானமாகும்.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

9.1 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் தமது விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.2 பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலமும், ''செயலாளர், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு'' எனும் முகவரிக்குச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெற்றுக் கொண்ட பண வைப்புப் பற்றுச்சீட்டின் வாடிக்கையாளர் பிரதியை (CUSTOMER'S COPY) விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டவும். அப் பிரதியின் நிழற்பிரதியை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

வைப்பிலிடும்போது பின்வரும் தகவல்களை நிதிவைப்புப் பற்றுச்சீட்டில் (Cash Deposit Slip) உள்ளடக்கவும்.

| | | |
|---|---|---|
| கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | - | செயலாளர், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு. |
| கணக்கு வைத்திருப்பவரின் முகவரி | - | சுதந்திர சதுக்கம், கொழும்பு 7 |
| வங்கிக் கணக்கு இலக்கம் | - | 7040712 |
| இலங்கை வங்கி | - | சுதந்திர சதுக்கம். |

9.3 குறித்த வகுதிகளின் கீழ் எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படாது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மாத்திரம் நடாத்தப்பட்ட போதிலும், பரீட்சை தொடர்பாக செலுத்திய பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

9.4 இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

9.5 முழுமையான தகவல்கள் அடங்கப்பெறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்துக்கு நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பார்வை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதியட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கவனிக்கவும்**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்படுவது என்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என கருதப்படலாகாது.

9.6 விண்ணப்பப்படிவம் A4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படல் வேண்டும். இல. 1.0 இலிருந்து 5.0 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், 6.0 இலிருந்து 7.0 வரையான தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்திலும், 8.0 இலிருந்து 11.0 வரையான தலைப்புக்கள் மூன்றாவது பக்கத்திலும், இலக்கம் 12 நான்காவது பக்கத்திலும் அமையும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.அது குறித்த தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மாதிரிப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ்மாதிரிப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறே மாதிரிப் படிவத்துடன் ஒவ்வாத அத்துடன் சகல அம்சங்களும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப் படும். பரீட்சை அறிவித்தலிலுள்ள மாதிரிப் படிவத்துக்கிணங்கவே விண்ணப்பம் காணப் படுகின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதன் பற்றுச்சீட்டு அதில் ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் பரீட்சார்த்திகள் திருப்தியுறல் வேண்டும்.மேலும் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை பரீட்சார்த்திகள் தம்வசம் வைத்திருத்தல் உசிதமானது.

9.7 விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிக்கப்பட்ட பரீட்சைத் திகதிக்கு முன்னர் குறைந்தது ஐந்து (05) நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறுஅறிவிக்கும் வேளையில் பின்வருவன தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும் ; அதாவது, பரீட்சையின் பெயர்,

பரீட்சார்த்தியின் முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றுடன் விண்ணப்பதாரிகள் கொழும்புக்கு வெளியே இருக்கும் பட்சத்தில், அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு,கோரிக்கைக் கடிதம் ஒன்றை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011 - 5288978 எனும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைப்பது பயனுள்ளதாகும். அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அழைப்பினை மேற்கொள்ளும் வேளையில், , விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் (போட்டோ) பிரதி, செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டு, தங்கள் வசமுள்ள விண்ணப்பத்தை தபாலிலிட்ட போது பதிவு செய்த பற்றுச்சீட்டு என்பவற்றைக் கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

9.8 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின்பேரில் பரீட்சையை நடாத்துதல், பிட்போடுதல் அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் பணிப்பாளர் நாயகம்,அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கேயுண்டு.

9.9 பரீட்சை நடாத்துதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்துடன் அவை மீறப்படும் பட்சத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் ஆளாக நேரிடும்.

9.10 ***விண்ணப்பதாரரின்ஆளடையாளம்.***- பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வண்ணம் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தினை நிரூபிக்குமாறு கோரப்படுவார். பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள்அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

9.11 அரச சேவை/ மாகாண அரச சேவை, அரச கூட்டுத்தாபனங்களில் சேவை புரியும் அலுவலர்கள் அவர்களின்திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன் சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது உறுதிப்படுத்தப்பட வேண்டியது கட்டாயமாகும். குறித்த நிறுவனம் ஒன்றுக்கூடாக விண்ணபிக்கும் பரீட்சார்த்தி ஒருவரின் கையொப்பமானது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் ஏனைய சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ஓய்வுபெற்ற அதிகாரியொருவர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர், 240,360 ரூபா அல்லது அதற்குக் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையின் தலைமைத் தேரர் அல்லது பிற மதங்களைச் சேர்ந்த சமயத்தலங்களுக்குப் பொறுப்பான பதவியிலுள்ள ஒருவர் ஆகிய யாரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**கவனிக்க :**

(அ) விண்ணப்பத்துடன் 4 ஆம் பந்தியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள தகைமைகளுக்கு உரிய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் அச்சான்றிதழ்களின் பூரண விபரங்கள் அடங்கிய பெறுபேறு அட்டவணைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் நிறைவேற்றுத் தர சேவை வகுதியின் III ஆம் தரத்திற்கு உரியதான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களிலுள்ள நிபந்தனைகள் ஆகியன இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

11. அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் பெறுபேறு வெளியிடப்படும் திகதியை அறிவித்து அனுப்பிய பிறகு, எழுத்துமூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் அடங்கிய பெறுபேறு பரீட்சை எழுதிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்பிவைப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் ஏதேனும்

ஒரு மொழியில் முன்பின்னான முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான விளம்பரமே வலுவானதாகவிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2017, ஓகத்து 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
அலுவலக உபயோகத்திற்கு

**இலங்கை பொறியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 / 2017**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT ENGINEERS TO THE GRADE III OF THE SRI LANKA ENGINEERING SERVICE – 2016/2017

பரீட்சைக்கு தோற்றும் மொழி : [ ]

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

விண்ணப்பிக்கும் வகுதி : [ ]

| | |
|---|---|
| சிவில் | 1 |
| இயந்திரவியல் | 2 |
| மின் (கனதி/ இலகு) | 3 |
| இரசாயனம் | 4 |
| பௌதீக வளம் | 5 |

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : Mr./Mrs./Miss
   .................................................................................
   .................................................................................
   ........................................................... உதாரணம் :
   Mr. GUNAWARDHANA, M.G.B.S.K.
   1.2 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
   .................................................................................
   .................................................................................
   .................................................................................
   1.3 முழுப் பெயர் :----.
   (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு)

2.
   2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
   2.2 பரீட்சை அனுமதிப்பத்திரம் அஞ்சல் செய்ய வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   2.3 தொலைபேசி இலக்கம் :
   வீடு :----.
   கையடக்க :----.
   2.4 தபால் நகரம் :----.
   2.5 மின்னஞ்சல் முகவரி :----.

3. ஆண்/ பெண் :
   ஆண் - 0, பெண் - 1 [ ]
   (உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5.
   5.1 தேசிய இனம் :
   (சிங்களவர் -1/ தமிழர் - 2/ இ. தமிழர் -3/ முஸ்லிம் - 4/ ஏனையோர் - 5) [ ]
   (உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)
   5.2 விவாகமானவர்/ விவாகமாகாதவர் :
   (விவாகமாகாதவர் - 1 / விவாகமானவர் -2) [ ]
   (உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)
   5.3 பிறந்த திகதி :
   ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]
   5.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
   வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

6. 6.1 கல்வித் தகைமைகள் :
   (i) பட்டம் அல்லது வர்த்தமானி அறிவித்தலின் 4.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் வலுவிலிருக்கும் திகதி :----.

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

(iii) பதிவு செய்யப்பட்ட இலக்கம் மற்றும் திகதி : ----.

(iv) பாடநெறியின் பெயர் : (உதாரணம் : பொறியியல் விஞ்ஞானமானி, Bsc Engineering)

(v) பாடத்திட்டம் : (உதாரணம் : சிவில், இயந்திரவியல், மின்சாரம், இரசாயனவியல், பௌதீகவியல்) :----.

(vi) பட்டம் அல்லது வர்த்தமானி அறிவித்தலின் 4.1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அல்லது பூரணப்படுத்திய வருடம் :----.

(vii) இறுதியாண்டின் பாடங்கள் :----.

(viii) பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

6.2 தொழிற் தகைமைகள் (உதாரணம் : AMIE, MICE, MIE) :

..................................................................................

..................................................................................

(i) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் அங்கத்துவ இலக்கம் :

7. தற்போது வகிக்கும் பதவி மற்றும் முன்னர் வகித்த பதவிகள் காணப்படுமாயின் அவை பற்றிய தகவல்கள் :----.
(சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி மற்றும் விலகிய திகதிகள், அவ்வாறு விலகுவதற்கான காரணத்தினையும் குறிப்பிடுதல் வேண்டும்.)

7.1 பதவி :----.

7.2 திணைக்களம் / நிறுவனம் :----.

7.3 நியமனத் திகதி :----.

7.4 நிரந்தர /ஓய்வூதியத்துடன் கூடிய /ஓய்வூதியமற்ற/ தற்காலிக என்பன பற்றி :----.

7.5 பதவி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி :----.

7.6 பதவியின் சம்பள அளவுத்திட்டம் மற்றும் தற்போது கிடைக்கப்பெறும் சம்பளம் :----.

7.7 முன்னர் வகித்த பதவிகள் தொடர்பான விபரங்கள் : (மேலதிக தாளொன்றினைப் பயன்படுத்த முடியும்) :----.

7.8 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பதவியை வகிக்கும் தாங்கள் ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அக் குற்றம் மற்றும் கிடைக்கப்பெற்ற தண்டனை தொடர்பாக விளக்கவும்.

..................................................................................

..................................................................................

8. ஏதேனும் குற்றச் செயலொன்றுக்கு எப்போதாவது அல்லது நீதி மன்றத்தில் குற்றவாளியாக இருந்திருப்பின், அக்குற்றம் மற்றும் கிடைக்கப்பெற்ற தண்டனை தொடர்பாக விளக்கமாக குறிப்பிடவும் :.........................

..................................................................................

..................................................................................

9. பற்றுச்சீட்டின் வாடிக்கையாளர் பிரதி (Customer's Copy) யினைக் கழராதவாறு ஒட்டவும்.

(பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் வாடிக்கையாளர் பிரதி (Customer's Copy) யின் பிரதியொன்றினை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமானதாக அமையும்)

செலுத்திய இலங்கை வங்கிக் கிளை :----.
திகதி :----.

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் மற்றும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானதும் சரியானதும் என உறுதியுரைக்கின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விபரம் பிழையானது அல்லது உண்மைக்குப் புறம்பானது என அறியப்படுமிடத்து எவ்வித இழப்பீட்டுத் தொகையும் வழங்காது என்னை சேவையில் இருந்து பதவி நீக்கம் செய்வதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்துள்ளேன்.

மேலும், பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை பிரசுரித்தல் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினைச் சான்றுப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலில் 9.10 இற்கு ஏற்ப இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ..............................................
........................ (முழுப் பெயர்) என்பவர் எனக்கு

தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளதாகவும், அப்பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளதாகவும், ..................................... ஆந் திகதியன்று அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டாரெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை சான்றுப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.
சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு சான்றுப்படுத்தவும்.)

12. விண்ணப்பதாரி அரச சேவையாளராயின்,திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற ................ ............................................................ (முழுப் பெயர்) என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், ............................ ஆந் திகதியன்று அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

மேலே 07 ஆம் பந்தியில் அலுவலரின் தற்போதைய சேவை பற்றி வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மை யானவை எனவும், அவரது பணிகள் மற்றும் நடத்தைகள் ...................................எனவும் சான்றுப்படுத்துகின்றேன். தற்போது அவர் வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்ப தற்கு முடியும்/ முடியாது.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையிட்டு சான்றுப்படுத்தவும்)

8-1150